# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081699

1. District : Kanya Kumari மாவட்டம் PS: Kanya Kumari VeAC. காவல்நிலையம் Year: 2022 ஆண்டு FIR No.: 06 மு.த.அ. எண் Date: 15.10.2022 நாள்

2. (i) Act சட்டம்: Code of Criminal Procedure Sections பிரிவுகள்: 102

(ii) Act சட்டம்: PC. Act 1988 (As amended in 2018) Sections பிரிவுகள்: Sec 7

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 14.10.2022 நாள் முதல் Date to : 15.10.2022 நாள் வரை

Time Period : நேர அளவு Time from : 19.45hrs நேரம் முதல் Time to : 02.45 hrs. நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2022 Time : நேரம் 12.30hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A.V. Moorthy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. Ayyapan pillai

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 06/06/1966 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Inspection cell Officer Tirunelveli, Tutucorin, Tenkasi and Kanyakumari dt. (g) Address : முகவரி District Collectorate Campus, Tirunelveli

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1). Tr. N. Vijaya Shanmugam, District Manager, TASMAC, Kanya Kumari District.
(2). Tr. V. Rejin, Salesman TASMAC Shop. No: 4715, Vadasery, Kanyakumari District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

– Seperate Sheets Enclosed –

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Inr. C. Sivasankar Rank Inspector VEAC to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 15/10/22

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 15.10.2022.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.10.2022 14.45hrs.

Name: பெயர் S. PETER PAUL DURAI
Rank: நிலை Dy. Supdt. of Police ……No. எண் ……
VAC, Kanyakumari Detachment @ Nagercoil

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கன்னியாகுமரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 6/2022 முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12 –ன் இணைப்பு.

மதிப்பிற்குரிய அய்யா,

| | |
|---|---|
| குற்ற அலுவலர்கள் :-<br><br>(i).திரு.N.விஜய சன்முகம், வயது-50.<br>த/பெ.U.S.நவநீதன்,<br>மாவட்ட மேலாளர்,<br>தமிழ்நாடு வாணிப கழகம்,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br><br>(ii).திரு.V.ரெஜின், வயது-47,<br>த/பெ.வர்க்கீஸ்,<br>விற்பனையாளர்<br>கடை எண்.4715, வடசேரி,<br>தமிழ்நாடு வாணிப கழகம்,<br>கன்னியாகுமரி மாவட்டம். | பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :- இன்று 15.10.2022 மதியம் 12.30 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் S.பீட்டர் பால் துரை ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.A.V.மூர்த்தி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், செயல்முறை நடவடிக்கை நாள்.14.10.2022 மற்றும் ரூ.1,77,000/-ஆகியவற்றை இணைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். |

அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.A.V.மூர்த்தி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். அய்யா, நான் 14.10.2022-ம் தேதி மாலை சுமார் 18.00 மணியளவில் அலுவலகம் முடிந்து பஸ்ஸில் வந்து கொண்டிருந்த போது நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை காவல் துணை கண்காணிப்பாளரிடமிருந்து அலைபேசிமூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் இரவு சுமார் 19.00 மணியளவில் நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலகத்திற்கு சென்று காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களை சந்தித்தேன், அப்போது அவர் தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (TASMAC) கன்னியாகுமரி மாவட்ட, மாவட்ட மேலாளர், அவர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுபானகடைகளிலிருந்து தனக்கு வேண்டப்பட்ட ஒரு குறிப்பிட்ட விற்பனையாளர் மூலம் லஞ்ச பணம் வசூல் செய்து வைத்திருந்ததை, அலுவலக பணிநேரம் முடிந்து தான் தங்கியிருக்கும் அறைக்கு வரும் போது அந்த விற்பனையாளரிடமிருந்து லஞ்சபணத்தை பெற்று கொண்டு செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (TASMAC)

கன்னியாகுமரி மாவட்ட, மாவட்ட மேலாளர், அவர்கள் மற்றும் லஞ்ச பணம் வசூல் செய்து வைத்திருப்பதாக குறிப்பிடப்படும் விற்பனையாளர் ஆகியோர் சந்திக்கும் போது திடீர் இணை ஆய்வு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க நானும், ஊழல் தடுப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.பீட்டர் பால் துரை, ஆய்வாளர்கள் திரு.ஜாண் பெஞ்சமின் மற்றும் திருமதி.ரெமா ஆகியோருடன் போலீஸ் பார்ட்டி சகிதம் நாகர்கோவில், டதி ஸ்கூல் ஜங்ஷன் அருகிலுள்ள வாட்டர் டேங்க் ரோட்டில் ஆங்காங்கே மறைந்து நின்று கவனித்து கொண்டிருந்த போது TN 78 U 6826 என்ற பதிவெண் கொண்ட Maruthi ALTO K10 காரில் டதி ஸ்கூல் ஜங்ஷனிலிருந்து வாட்டர் டேங்க் செல்லும் ரோட்டில் பைப்புவிளை செல்லும் தெரு பக்கத்தில் காரை நிறுத்தி TASMAC மாவட்ட மேலாளர் அவர்கள் கீழே இறங்கி நின்று கொண்டிருந்த போது, ஒரு நபர் TASMAC மாவட்ட மேலாளர் அவர்கள் அருகில் வந்து பேசி கொண்டிருந்தார். அப்போது நானும், லஞ்ச ஒழிப்பு குழுவினரும் அந்த காரின் அருகில் சென்று அங்கு நின்று கொண்டிருந்த இருவரிடமும் விசாரித்த போது, காரில் வந்தவர் தனது பெயர் விஜயசண்முகம் என்றும், கன்னியாகுமரி மாவட்ட TASMAC மாவட்ட மேலாளராக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவருடன் நின்று பேசிகொண்டிருந்த வரை விசாரித்த போது, அவர் தனது பெயர் திரு.V.ரெஜின் என்றும், தான் வடசேரி, TASMAC கடை எண்.4715-ல் விற்பனையாளராக பணிபுரிவதாகவும், மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்களின் கார் ஓட்டுநராக செயல்படுவதாகவும் தெரிவித்தார். அதை தொடர்ந்து மேற்படி கிடைத்த ரகசிய தகவலின்படி விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின்-யிடம் மாவட்ட மேலாளர் அவர்களுக்கு கொடுப்பதற்காக மதுபானக்கடை பணியாளர்களிடமிருந்து வசூல் செய்த லஞ்சபணம் எங்கே என்று கேட்டபோது, அவர் அந்த பணத்தை அருகிலுள்ள தனது வீட்டில் வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரிடம் அதனை ஆஜர் செய்யும்படி கூறியபோது அவர் அவ்விடத்திற்கு அருகில் க.எண்.72/34-B, பைப்புவிளை, வாட்டர் டேங்க் ரோடு என்ற முகவரியில் அமைந்துள்ள அவருடைய வீட்டிற்கு சென்று பணத்தினை எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த பணமானது காக்கி நிற கவரினுள் வைக்கப்பட்டிருந்தது. அந்த இடமானது இருட்டாகவும், வாகனங்கள் செல்லும் சாலையாகவும் இருந்ததாலும், மேலும் அந்த இடத்தில் பொது மக்கள் அதிகம் கூடிவிடுவார்கள் என்பதாலும், மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம், விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின் ஆகியோரை அழைத்து கொண்டு அவ்விடத்திற்கு அருகில் டதி ஸ்கூல் ஜங்ஷனிலிருந்து WCC செல்லும் சாலையின் இடதுபுறம் மாவட்ட மேலாளர் தங்கியிருக்கும் EBEN Lodge-ன் இரண்டாவது தளத்தில் 6-ம் எண் அறைக்கு வந்து மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்கள் மூலம் அறையை திறந்து, அந்த அறையில் வைத்து விற்பனையாளர் /

ஓட்டுநர் திரு.V.ரெஜின் எடுத்து வந்து ஆஜர் செய்த காக்கி நிற கவரினுள் வைக்கப்பட்டிருந்த பணத்தினை வெளியே எடுத்து பார்த்த போது, அதில் 6 கட்டு ரூபாய் நோட்டுகள் தனித்தனியாக ரப்பர் பேண்ட் போட்டு கட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த ரூபாய் நோட்டு கட்டுகளை எடுத்து எண்ணி பார்த்ததில் அந்த ரூபாய் நோட்டுகட்டுகளின் விவரம் பின்வருமாறு காணப்பட்டது.

1) 2000 x 9 = 18,000/-    2) 500 x 100 = 50,000/-
3) 500 x 70 = 35,000/-    4) 500 x 52 = 26,000/-
5) 500 x 50 = 25,000/-    6) 500 x 46 = 23,000/-

அவற்றை மொத்தமாக எண்ணி பார்த்த போது அதில் 2000 ரூபாய் நோட்டுகள் 9-ம் (9 x 2000 =ரூ.18,000/-), 500 ரூபாய் நோட்டுகள் 318-ம் (318 x 500 = ரூ.1,59,000/-) ஆக மொத்தம் ரூபாய் 1,77,000/- காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின்-யிடம் கேட்ட போது, அந்த பணமானது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள TASMAC மதுபான கடைகளில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து, மீனாட்சிபுரம் டாஸ்மாக் கடை எண்.4747-ல் விற்பனையாளராக பணிபுரியும் திரு.மால்ட்டன் (Cell No.9443607669) மற்றும் தக்கலை பேலஸ் ரோட்டில் அமைந்துள்ள டாஸ்மாக் கடைகளில் வலதுபுறம் அமைந்துள்ள கடையில் மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு.நடேசன் (Cell No.9442305794) ஆகியோர்கள் வசூலித்து மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்களுக்கு கொடுக்க தன்னிடம் கொடுத்த பணம் என்று கூறினார். மேலும் இவ்வாறு தன்னிடம் கொடுக்கும் பணத்தினை மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்கள் அவருடைய சொந்த ஊரான உடுமலைபேட்டைக்கு செல்லும் போதோ அல்லது அவர் கேட்கும்போதோ அவரிடம் கொடுத்து விடுவதாகவும் தெரிவித்தார். இது குறித்து மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்களிடம் கேட்ட போது இந்த பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். எனவே அவரது கூற்று ஏற்று கொள்ளதக்கபடியாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.1,77,000/- ஐ லஞ்ச பணமாக கருதி செயல்முறை நடவடிக்கை தயாரிக்கப்பட்டு அதன் மூலம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் மூலம் தமிழ்நாடு மாநில வாணிப கழக (TASMAC) கன்னியாகுமரி மாவட்ட, மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் என்பவர் மதுபானகடை விற்பனையாளர்களிடமிருந்து பொதுமக்களுக்கு அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட (MRP) அதிக தொகைக்கு மதுபாட்டில்கள் விற்பனை செய்தால் அதனை தணிக்கை செய்து அந்த கடை பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள

மதுபானகடைகளின் எண்ணிக்கைகளை குறைவு செய்தபோது அந்த கடைகளில் பணிபுரிந்த பணியாளர்களை மீதமுள்ள கடைகளில் பணியமர்த்தியதால் மதுபானகடைகளில் அளவுக்கு அதிகமான பணியாளர்கள் பணிபுரிந்தனர். அவ்வாறு விற்பனைக்கு தேவையான பணியாளர்களை தவிர மற்ற பணியாளர்கள் சுழற்சிமுறையில் தங்களது சொந்த வேலைகளை கவனித்து கொண்டு அரசு ஊதியம் பெறுவதை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காகவும், தனது வாகன ஓட்டுனரான விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின் மூலம் லஞ்ச பணம் வசூல் செய்து குற்றமுறு நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டு வருவது தெரியவருகிறது. எனவே கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.1,77,000/- மற்றும் செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை தக்க மேல்நடவடிக்கைக்காக எனது இந்த புகார் மனுவுடன் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். A.V.மூர்த்தி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர். திருநெல்வேலி மாவட்டம். Sir, Received a complaint on 15.10.2022 at 12.30 hrs and registered a case in Kanyakumari Detachment @ Nagercoil V&AC Crime No.6/2022 u/s. 102 Cr.P.C and 7 of PC Act 1988 (as amended 2018) S/d 15.10.2022 DSP, V&AC, Kanyakumari Detachment @ Nagercoil. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுகுழு அலுவலர் அவர்களின் 14.10.2022 தேதியிட்ட செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: 1)திரு.A.V.மூர்த்தி, ஆய்வுகுழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் 2)திரு.S.பீட்டர் பால் துரை, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 3)திரு.S.ஜாண் பெஞ்சமின், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 4)திருமதி.T.T.ரெமா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். இன்று 14.10.2022-ம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு மாநில வாணிப கழக (TASMAC) அனைத்து மதுபானகடைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் பொதுமக்களுக்கு அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட (MRP) அதிக தொகைக்கு மதுபாட்டில்கள் விற்பனை செய்தால் அதனை தணிக்கை செய்து அந்த கடை பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள மதுபானகடைகளின் எண்ணிக்கைகளை குறைவு செய்தபோது அந்த கடைகளில் பணிபுரிந்த பணியாளர்களை மீதமுள்ள கடைகளில் பணியமர்த்தியதால், தற்போது

மதுபானகடைகளில் அளவுக்கு அதிகமான பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவ்வாறு விற்பனைக்கு தேவையான பணியாளர்களை தவிர மற்ற பணியாளர்கள் சுழற்சிமுறையில் தங்களது சொந்த வேலைகளை கவனித்து கொண்டு அரசு ஊதியம் பெறுவதை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காகவும், தமிழ்நாடு மாநில வாணிப கழகம் (TASMAC) கன்னியாகுமரி மாவட்ட, மாவட்ட மேலாளர், அவர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுபானகடைகளிலிருந்து தனக்கு வேண்டபட்ட ஒரு குறிப்பிட்ட விற்பனையாளர் மூலம் லஞ்ச பணம் வசூல் செய்து வைத்திருந்ததை அலுவல பணிநேரம் முடிந்து தான் தங்கியிருக்கும் அறைக்கு வரும் போது அந்த விற்பனையாளரிடமிருந்து லஞ்சபணத்தை பெற்று கொண்டு செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாவட்ட மேலாளர் தங்கியிருக்கும் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், டதி ஸ்கூல் ஜங்ஷன் அருகிலுள்ள வாட்டர் டேங்க் ரோட்டில் ஆங்காங்கே மறைந்து நின்று கவனித்து கொண்டிருந்த போது TN 78 U 6826 என்ற பதிவெண் கொண்ட Maruthi ALTO K10 காரில் டதி ஸ்கூல் ஜங்ஷனிலிருந்து வாட்டர் டேங்க் செல்லும் ரோட்டில் பைப்புவிளை செல்லும் தெரு பக்கத்தில் காரை நிறுத்தி மாவட்ட மேலாளர் அவர்கள் கீழே இறங்கி நின்று கொண்டிருந்த போது ஒரு நபர் மாவட்ட மேலாளர் அவர்கள் அருகில் வந்து பேசி கொண்டிருந்தார். அப்போது ஆய்வு அலுவலர் மற்றும் லஞ்ச ஒழிப்பு போலீஸார் அந்த காரின் அருகில் சென்று அங்கு நின்று கொண்டிருந்த இருவரிடமும் விசாரித்த போது, காரில் வந்தவர் தனது பெயர் விஜயசண்முகம் என்றும், கன்னியாகுமரி மாவட்ட TASMAC மாவட்ட மேலாளராக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் ஓட்டிவந்த TN 78 U6826 என்ற பதிவெண் கொண்ட வாகனம் பற்றி விசாரித்தபோது, அது தன்னுடைய சொந்த வாகனம் என்றும், அந்த கார் தனது மனைவி திருமதி.ராதா பெயரில் இருப்பதாகவும் தெரிவித்தார். அவருடன் நின்று பேசிகொண்டிருந்த வரை விசாரித்த போது, அவர் தனது பெயர் திரு.V.ரெஜின் என்றும், தான் வடசேரி, TASMAC கடை எண்.4715-ல் விற்பனையாளராக பணிபுரிவதாகவும், மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்களின் கார் ஓட்டுநராக செயல்படுவதாகவும் தெரிவித்தார். அதை தொடர்ந்து மேற்படி கிடைத்த ரகசிய தகவலின்படி விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின்-யிடம் மாவட்ட மேலாளர் அவர்களுக்கு கொடுப்பதற்காக மதுபானக்கடை பணியாளர்களிடமிருந்து வசூல் செய்த லஞ்சபணம் எங்கே என்று கேட்டபோது, அவர் அந்த பணத்தை தனது வீட்டில் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதன்பேரில் அவரிடம் அந்த பணத்தினை எடுத்து வருமாறு ஆய்வு குழு அலுவலர் கூறியபோது அவர் க.எண்.72/34-B, பைப்புவிளை, வாட்டர் டேங்க் ரோடு என்ற முகவரியில் அமைந்துள்ள அவருடைய வீட்டிற்கு சென்று பணத்தினை எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த பணமானது காக்கி நிற கவரினுள்

வைக்கப்பட்டிருந்தது. பின்பு மாவட்ட மேலாளரின் காரில் வேறு பணம் ஏதாவது இருக்கிறதா என்று சோதனை செய்தபோது அதில் பணம் ஏதும் காணப்படவில்லை. அந்த இடமானது இருட்டாகவும், வாகனங்கள், செல்லும் சாலையாகவும் இருப்பதாலும், மேலும் அந்த இடத்தில் பொது மக்கள் அதிகம் கூடிவிடுவார்கள் என்பதாலும், மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம், விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின் ஆகியோரை அழைத்து கொண்டு அவ்விடத்திற்கு அருகில் டதி ஸ்கூல் ஜங்ஷனிலிருந்து WCC செல்லும் சாலையின் இடதுபுறம் மாவட்ட மேலாளர் தங்கியிருக்கும் EBEN Lodge-ன் இரண்டாவது தளத்தில் 6-ம் எண் அறைக்கு வந்து மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்கள் மூலம் அறையை திறந்து, அந்த அறையில் வைத்து விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின் எடுத்து வந்து ஆஜர் செய்த காக்கி நிற கவரினுள் வைக்கப்பட்டிருந்த பணத்தினை வெளியே எடுத்து பார்த்த போது, அதில் 6 கட்டு ரூபாய் நோட்டுகள் தனித்தனியாக ரப்பர் பேண்ட் போட்டு கட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த ரூபாய் நோட்டு கட்டுகளை எடுத்து எண்ணி பார்த்ததில் அந்த ரூபாய் நோட்டுகட்டுகளின் விவரம் பின்வருமாறு,

| | |
|---|---|
| 1) 2000 x 9 = 18,000/- | 2) 500 x 100 = 50,000/- |
| 3) 500 x 70 = 35,000/- | 4) 500 x 52 = 26,000/- |
| 5) 500 x 50 = 25,000/- | 6) 500 x 46 = 23,000/- |

அவற்றை மொத்தமாக எண்ணி பார்த்த போது அதில் 2000 ரூபாய் நோட்டுகள் 9-ம் (9 x 2000 =ரூ.18,000/-), 500 ரூபாய் நோட்டுகள் 318-ம் (318 x 500 = ரூ.1,59,000/-) ஆக மொத்தம் ரூபாய் 1,77,000/- காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின்-யிடம் கேட்ட போது, அந்த பணமானது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள TASMAC மதுபான கடைகளில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து, மீனாட்சிபுரம் டாஸ்மாக் கடை எண்.4747-ல் விற்பனையாளராக பணிபுரியும் திரு.மால்ட்டன் (Cell No.9443607669) மற்றும் தக்கலை பேலஸ் ரோட்டில் அமைந்துள்ள டாஸ்மாக் கடைகளில் வலதுபுறம் அமைந்துள்ள கடையில் மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு.நடேசன் (Cell No.9442305794) ஆகியோர்கள் வசூலித்து மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்களுக்கு கொடுக்க தன்னிடம் கொடுத்த பணம் என்று கூறினார். மேலும் இவ்வாறு தன்னிடம் கொடுக்கும் பணத்தினை மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்கள் அவருடைய சொந்த ஊரான உடுமலைபேட்டைக்கு செல்லும் போதோ அல்லது அவர் கேட்கும்போதோ அவரிடம் கொடுத்து விடுவதாகவும் தெரிவித்தார். இது குறித்து மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் அவர்களிடம் கேட்ட போது இந்த பணம் குறித்து தனக்கு

எதுவும் தெரியாது என்று கூறினார். எனவே அவரது கூற்று ஏற்று கொள்ளதக்கபடியாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.1,77,000/- ஐ லஞ்ச பணமாக கருதி இந்த செயல்முறை நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் மூலம் தமிழ்நாடு மாநில வாணிப கழக (TASMAC) கன்னியாகுமரி மாவட்ட, மாவட்ட மேலாளர் திரு.விஜயசண்முகம் என்பவர் மதுபானகடை விற்பனையாளர்களிடமிருந்து பொதுமக்களுக்கு அதிகபட்ச சில்லறை விற்பனை விலையை விட (MRP) அதிக தொகைக்கு மதுபாட்டில்கள் விற்பனை செய்தால் அதனை தணிக்கை செய்து அந்த கடை பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காகவும். தமிழ்நாட்டில் உள்ள மதுபானகடைகளின் எண்ணிக்கைகளை குறைவு செய்தபோது அந்த கடைகளில் பணிபுரிந்த பணியாளர்களை மீதமுள்ள கடைகளில் பணியமர்த்தியதால் மதுபானகடைகளில் அளவுக்கு அதிகமான பணியாளர்கள் பணிபுரிந்தனர். அவ்வாறு விற்பனைக்கு தேவையான பணியாளர்களை தவிர மற்ற பணியாளர்கள் சுழற்சிமுறையில் தங்களது சொந்த வேலைகளை கவனித்து கொண்டு அரசு ஊதியம் பெறுவதை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காகவும், தனது வாகன ஓட்டுனரான விற்பனையாளர் / ஓட்டுநர் திரு.V.ரெஜின் மூலம் லஞ்ச பணம் வசூல் செய்து குற்றமுறு நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டு வருவது தெரியவருகிறது. மேலும் இந்த திடீர் இணை ஆய்வின் போது இந்த செயல்முறை நடவடிக்கை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் மேற்படி EBEN Lodge அறையில் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனைக்கான செயல்முறை நடவடிக்கைகள் 14.10.2022-ம் தேதி இரவு 07.45 மணிக்கு தொடங்கப்பட்டு இன்று 15.10.2022-ம் தேதி அதிகாலை 02.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

The original FIR along with the complaint, Proceedings, Seized amount Rs.1,77,000/- and the statement of suspect officers sent to the Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District @ Nagercoil for the trial offences under PC Act cases and the copies sent to the concerned officers.

15.10.2022

S. PETER PAUL DURAI
Dy. Supdt. of Police
VAC, Kanyakumari
Detachment @ Nagercoil